Anx - II ①

சுருக்கம்

கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி – சென்னை, SRM Institute of Science and Technology அறக்கட்டளை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, இருங்களூர் கிராமத்தில் "SRM திருச்சி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2018–19–ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதியளித்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண்.100

நாள்.26.5.2018,
விளம்பி, வைகாசி 12,
திருவள்ளுவர் ஆண்டு, 2049.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.356, உயர்கல்வித் (இ1) துறை, நாள்: 29.9.2009.
2. அரசாணை (நிலை) எண்.4, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.
3. அரசு கடிதம் எண்.17861/இ1/2011–1, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.16.9.2011.
4. அரசாணை (நிலை) எண்.40, உயர்கல்வித் (இ1) துறை, நாள். 28.02.2014.
5. அரசாணை (நிலை) எண்கள். 107, 108 மற்றும் 109, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.14.5.2015.
6. திருச்சிராப்பள்ளி, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை ந.க.எண்.1115/அ1/2018, நாள்.23.3.2018.
7. திருச்சிராப்பள்ளி, மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வறிக்கை ந.க.ஆ1/20377/2017, நாள்.24.3.2018.
8. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.38789/ஆர் 2/2017, நாள்.4.05.2018.

* * * *   * * *   * * * *

ஆணை :–

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, இருங்களூர் கிராமத்தில் "SRM திருச்சி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்ற பெயரில் அரசு நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2018–19–ஆம் கல்வியாண்டில் தொடங்க, சென்னை, SRM Institute of Science and Technology அறக்கட்டளை சார்பில் விண்ணப்பம் பெறப்பட்டு, திருச்சிராப்பள்ளி, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் மற்றும் திருச்சிராப்பள்ளி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரை பெறப்பட்டது எனவும், இக்கல்வி முகமை பின்வருவனவற்றை நிறைவு செய்துள்ளதாகவும், மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்:–

1) கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்வி முகமையின் பெயரில் கூட்டாக ரூ.20,00,000/– (ரூபாய் இருபது லட்சம்) வைப்புத்தொகை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தின் இரசீது எண். M 536473, நாள்.19.12.2017–இல் முதலீடு செய்யப்பட்டுள்ளது.



PRINCIPAL
SRM TRICHY COLLEGE OF
ARTS AND SCIENCE
IRUNGALUR,TRICHY-621 105

2) இக்கல்வி முகமைக்கு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, இருங்களுர் கிராமத்தில் புல எண்கள். 241/2, 241/3A, 241/3B, 242/1A, 242/1B, 242/2A, 242/2B, 242/2C, 242/3B, 242/3C, 242/4B, 242/5B, 242/5C, 242/5E, 242/5F மற்றும் 242/6A ஆகியவற்றில் 6.18 ஏக்கர் நிலம் சென்னை, SRM Institute of Science and Technology அறக்கட்டளைக்கு சொந்தமாக உள்ளது

3) மேற்கண்ட நிலம் தொடர்ச்சியாக உள்ளது என திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, இருங்களுர் கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார்.

4) துவங்கப்பட உள்ள கல்லூரி அமையவுள்ள 20 கி.மீ. சுற்றளவில் 1 கல்லூரி மற்றும் 23 பள்ளிகள் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) சுயநிதி கல்லூரிகள் தொடங்கி நடத்துவது தொடர்பாக அரசாணைகளில் விதித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதாக கல்வி முகமை ரூ.20–க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்த பத்திரம் அளித்துள்ளது.

6) இக்கல்லூரிக்கென கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் (RCC) முதலாமாண்டு கல்லூரி நடத்த போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) கல்வி முகமை சார்பில் SRM திருச்சி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி என்ற கல்லூரியை தொடங்குவது தொடர்பாக விண்ணப்பக் கட்டணம் ரூ.20,000/– ஆய்வுக்கட்டணத்திற்கு ரூ.15,000/– செலுத்தப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் மற்றும் திருச்சிராப்பள்ளி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரை ஆகியவற்றின் அடிப்படையில், "SRM திருச்சி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்ற பெயரில், புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, இருங்களுர் கிராமத்தில் 2018–19–ஆம் கல்வியாண்டில் தொடங்குவதற்கு பரிந்துரை செய்து ஆணையினை வழங்குமாறு மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலர் 24.03.2018 நாளிட்ட ஆய்வறிக்கையில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், இருங்களுர் கிராமம் புஞ்சை புல எண்.241/2, 241/3A, 3B, 242/1A, 1B, 242/2A, 2B, 2C, 242/3B, 3C, 4B, 5B, 5C, 5E, 5F, 6A மொத்தம் 6 ஏக்கர் 18 சென்ட் நிலத்தில் எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியுட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி அறக்கட்டளை சார்பில் எஸ்.ஆர்.எம். திருச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) என்ற பெயரில் புதிய நிதி உதவி பெறாத தனியார் இருபாலர் கல்லூரி தொடங்கிட அரசு அங்கீகாரம் பெறுவது தொடர்பாக 7.6.2016 நாளிட்ட சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் கோரப்பட்டது என்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், இருங்களுர் கிராமத்தில் மொத்தம் 2 ஹெக்டேர் 49.5 ஏர்ஸ் (6 ஏக்கர் 18 சென்ட்) ஆகிய நிலங்களில் எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியுட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி அறக்கட்டளை சார்பில் எஸ்.ஆர்.எம். திருச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) என்ற பெயரில் புதிய நிதி உதவி பெறாத தனியார் இருபாலர் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை 2018–19–ஆம் ஆண்டில் துவங்குவதற்காக கட்டிடம் கட்டுவது தொடர்பாக அறிக்கை கோரியதன் பேரில் மண்ணச்சநல்லூர் வருவாய் வட்டாட்சியர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றும் மேற்காண் கல்லூரியின் நிலம் புன்செய் நிலங்கள் எனவும் எஸ்.ஆர்.எம் கல்லூரி நிறுவனத்திற்கு மேற்படி கிராமத்தில் மருத்துவ கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் செவிலியர் பயிற்சி நிறுவனம் என்ற பல கல்வி சார்ந்த நிறுவனங்கள் சுமார்

PRINCIPAL
SRM TRICHY COLLEGE OF
ARTS AND SCIENCE
IRUNGALUR,TRICHY-621 105

120 ஏக்கரில் உள்ளது எனவும் இதில் 2 ஹெக்டேர் 49.5 ஏர்ஸ் (6 ஏக்கர் 18 செண்ட்) ஆகிய நிலங்கள் எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியுட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி பெயரில் வருவாய் கணக்குகளில் தாக்கலாகி உள்ளது எனவும் இப்புலங்கள் மொத்தம் 2 ஹெக்டர் 49.5 ஏர்ஸ் நிலத்தில் எஸ்.ஆர்.எம். திருச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) என்ற பெயரில் புதிய நிதி உதவி பெறாத தனியார் இருபாலர் கல்லூரி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும் மேற்படி நிலங்கள் அனைத்தும் எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியுட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி பயன்பாட்டில் உள்ளது எனவும் மேற்காண் புல எண்கள் குறித்த விவரம் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :–

1. நஞ்சை மற்றும் புறம்போக்கு நிலங்கள் ஏதும் கவரப்படவில்லை.
2. உத்தேச மனை பிரிவு கட்டிடங்கள் கட்டுவதற்கு வசதியான இடமாக உள்ளது. மேலும், வெள்ளத்தால் பாதிக்க வாய்ப்பில்லை மற்றும் மேற்படி புலங்களில் இடையில் நீர்ப்பாசன வாய்க்கால், ஓடை, நீர்நிலை குட்டை, பாசன ஏரி மற்றும் வெள்ள நீர் வடிகால் எதுவும் இல்லை.
3. மேற்கண்ட நிலங்கள் நிலம் கையகப்படுத்தும் சட்டம் 1894 ஆம் ஆண்டின் 4(1)–ன் கீழ் எந்த துறையிலும் அறிவிப்பு செய்யப்படவில்லை மற்றும் நில சீர்திருத்த சட்டம் நில ஆர்ஜிதம் போன்ற நடவடிக்கைகள் போன்றவற்றில் கவரப்படவில்லை.
4. நில உச்சவரம்பு சட்டம் 1976–ன்படி கையகப்படுத்தப்படவில்லை.
5. இந்நிலங்களுக்கு இடையிலோ அல்லது சுற்றியோ சுடுகாடு, இடுகாடு ஏதும் இல்லை.
6. புராதன சின்னங்கள் மத வழிபாட்டுத் தலங்கள் இல்லை.
7. ஆய்வக கழிவுகள் உரிய முறையில் சுத்திகரிப்பு செய்ய / அப்புறப்படுத்திட தனியாக இடம் ஒதுக்கப்பட்டு பாதுகாப்பாக வைத்திட இடவசதி செய்யப்பட்டுள்ளது.
8. கல்லூரி துவங்கப்படவுள்ள புலங்கள் விவசாய நிலங்கள் அல்ல.
9. கட்டிட அனுமதி, நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து முறைப்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.
10. சுற்றுப்புற சுகாதாரம் முறையாக பராமரித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
11. போக்குவரத்து நெரிசல் உள்ள இடமல்ல.
12. மாற்றுத் திறனாளிகள் வந்து செல்ல ஏதுவாக சமதளம் (Ramp) ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
13. மேற்கண்ட புலங்கள் அனைத்தும் தமிழ்நாடு நில உடமைச் சட்டம் 1961 பிரிவு 37(B)–ன் கீழ் வரப்பெற்று அனுமதிபெற ஏற்கனவே சம்பந்தப்பட்ட நிறுவனத்தினரால் மனு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேலும் மாவட்ட வருவாய் அலுவலர், தொடர்புடைய நிலங்களை 21.3.2018 அன்று தலப்பார்வை செய்தும் SRM திருச்சி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி தரப்பில் அளிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் மண்ணச்சநல்லூர் தாலுக்கா, இருங்களூர் கிராம வருவாய் கணக்குகளை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் Certificate under section 37(B) of Tamil Nadu Land Reforms (Land fixation and ceiling) Act. 1961-ன்படி அரசுக்கு ஏற்கனவே அளித்த விண்ணப்பம் நடவடிக்கையில் உள்ளது எனவும் அதன் முடிவுக்கு கட்டுப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு சென்னை, SRM Institute of Science and Technology அறக்கட்டளை சார்பில் SRM திருச்சி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி என்ற பெயரில் நிதி உதவி பெறாத புதிய தனியார் இருபாலர் கல்லூரி தொடங்கிட சரிப்பார்ப்பு படிவத்துடன் பரிந்துரை செய்துள்ளார்.

4...

PRINCIPAL
SRM TRICHY COLLEGE OF
ARTS AND SCIENCE
IRUNGALUR,TRICHY-621 105

3. மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக் கல்வி இயக்குநரால், சென்னை, SRM Institute of Science and Technology அறக்கட்டளை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, இருங்களூர் கிராமத்தில் "SRM திருச்சி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி" என்கிற பெயரில், புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை துவங்குவதற்கு அனுமதி வேண்டி பரிந்துரைக்கப்பட்ட கருத்துரு மேலே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு மற்றும் ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணைகள், கடிதம், திருச்சிராப்பள்ளி, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் மற்றும் திருச்சிராப்பள்ளி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் ஆய்வறிக்கையின்படி, அரசால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், கீழ்க்காணும் ஆவணங்கள் சார்ந்த கல்வி முகமையிடமிருந்து பெறப்பட்டுள்ளது:–

1) இக்கல்லூரி நிலம் குறித்து அரசு சிறப்பு வழக்கறிஞர், சென்னை அவர்களின் சட்டக் கருத்து பெறப்பட்டுள்ளது.

2) உத்தேச கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி கட்டிடம் கட்ட அனுமதி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.22784/2010 சிபி, நாள்.25.3.2011–ல் கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைக்குட்பட்டு வழங்கப்பட்டுள்ளது:–

> EIA Clearance சான்று பெற்றுக் கொண்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், Ministry of Environment, Forest and Climate Change, Government of India பிறப்பித்துள்ள **9.6.2015** நாளிட்ட சுற்றறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது:–
>
> xxx it is clarified that the Notification No.S.O.3252 (E), dated.22.12.2014 provides exemption to buildings of educational institutions including universities form obtaining prior Environment Clearance under the provisions of the EIA Notification, 2006 subject to sustainable environmental Management. In case of medical universities / institutes the component of Hospitals will continue to require prior Enviroment Clearance.

3) உத்தேச கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி கட்டுமானத்திற்கு திருச்சி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

4) கல்லூரிக்கான கட்டிட வரைபட அனுமதி இருங்களூர் ஊராட்சிமன்றத் தலைவர் / செயல் அலுவலர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

5) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து போக்குவரத்து தடையின்மை சான்று, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு, சுகாதாரத்துறை, மற்றும் தீயணைப்புத் துறைகளிடமிருந்து தடையின்மை சான்றுகளும் பெறப்பட்டுள்ளன.

6) இக்கல்லூரி கட்டிடத்திற்கான நிலைத்தன்மை சான்று திருச்சி பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது

7) நிலத்தொடர்ச்சி சான்றிதழ் மண்ணச்சநல்லூர் வட்டம், இருங்களூர் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

PRINCIPAL
SRM TRICHY COLLEGE OF
ARTS AND SCIENCE
IRUNGALUR TRICHY-621 105

8) நில பயன்பாட்டுச் சான்று திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

4. கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் பரிந்துரை மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை மற்றும் மேலே பத்தி 3 (1) முதல் (8) வரை குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், 2018–19–ஆம் கல்வியாண்டு முதல், சென்னை, SRM Institute of Science and Technology அறக்கட்டளை சார்பில் "SRM திருச்சி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி என்ற பெயரில், அரசு நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, இருங்களூர் கிராமத்தில் புல எண்கள். 241/2, 241/3A, 241/3B, 242/1A, 242/1B, 242/2A, 242/2B, 242/2C, 242/3B, 242/3C, 242/4B, 242/5B, 242/5C, 242/5E, 242/5F மற்றும் 242/6A ஆகியவற்றில் 6.18 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள நிரந்தரக் கட்டிடத்தில் (RCC கட்டிடம்), முதலாமாண்டில் B.C.A., B.Sc (Computer Science),B.Sc., Mathematics., B.Sc Hotel Management and Catering Science., B.Com., and B.B.A., ஆகிய பாடப்பிரிவுகளுடன் துவங்க, கீழ்க்கண்ட சான்றுகளை சார்ந்த கல்வி முகமையானது மூன்று மாத காலத்திற்குள் பெற்று அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்கின்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:–

1) Land Re-Classification Certificate from DTCP.
2) Certificate under section 37(B) of Tamil Nadu Land Reforms (Land fixation and ceiling) Act. 1961 பெறப்பட வேண்டும்.

5. மேற்கண்ட அனுமதி, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது எனவும் அரசு ஆணையிடுகிறது: –

(1) கல்லூரியின் நிரந்தர இடத்தில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதற்கான உரிய சான்றிதழுடன் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
(2) அனைத்துப் பாடப்பிரிவுகளும் தொடங்குவதற்கு முன்பே சார்ந்த பல்கலைக்கழகத்தின் இணைவு பெறுதல் வேண்டும்.
(3) மேலே பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள இடம் கல்லூரி பயன்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப் படவேண்டும்.
(4) அரசு எவ்விதமான நிதியுதவியையும் எத்தருணத்திலும் இக்கல்லூரிக்கு வழங்காது.
(5) சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவது தொடர்பான அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கல்வி முகமை முழுமையாக நிறைவு செய்யவேண்டும்.
(6) அரசு / பல்கலைக்கழகம் அனுமதித்துள்ள பாடப்பிரிவுகளைத் தவிர வேறு எந்த பாடப்பிரிவுகளையும் கல்வி முகமை கல்லூரியில் தொடங்கக் கூடாது.
(7) பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு / பல்கலைக்கழகம் / அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல் மற்றும் கல்வித்தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே கல்லூரியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர் அமர்த்தப்படவேண்டும்.
(8) கல்விமுகமை, அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்யும் ஏற்புடைய கட்டணங்களைத் தவிர முதலீட்டாளர் கட்டணம் அல்லது நன்கொடை ஆகியவற்றை எந்தவிதத்திலும் பெறக்கூடாது.

6...

PRINCIPAL
SRM TRICHY COLLEGE OF
ARTS AND SCIENCE
IRUNGALUR,TRICHY-62[illegible]

(9) அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநரால் நிர்ணயம் செய்யப்பட்ட படிப்புக்கட்டணம், சிறப்புக்கட்டணம், விண்ணப்பக்கட்டணம், பதிவுக்கட்டணம், ஆய்வுக் கட்டணம், காப்புறுதிக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே கல்லூரி மாணாக்கரிடம் வசூலிக்கவேண்டும்.

(10) கல்விமுகமை, அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநர் அவ்வப்போது அறிவிக்கும் மாணாக்கர் சேர்க்கைக்கான நெறிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றவேண்டும். மேலும், அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, 50 விழுக்காடு இடங்கள் மற்றும் சார்ந்த பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்படும் அனைத்து கூடுதல் இடங்களையும் நிரப்ப வேண்டும்.

(11) கல்விமுகமை, இக்கல்லூரியை நிர்வகிக்க முடியாமல் போகும் நிலையில் அதனை அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராது.

(12) மின் இணைப்பு தரச்சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

(13) அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பின்னர், உரிய அறிக்கை பெற்று, ஆய்வு மேற்கொண்டு உரிய நிரந்தரக் கட்டிடத்தில், அனைத்து வசதிகளுடன் சிறந்த முறையில் செயல்பட்டு வந்தால் மட்டுமே தொடர்ந்து இக்கல்லூரி செயல்பட அனுமதிக்கப்படும்.

(14) கல்லூரியில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களை நிரப்பும் போது மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சதவீத இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(15) கல்லூரியில் தகுதிவாய்ந்த பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உதவி பேராசிரியர் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட வேண்டும். இவர்களுக்கு 25 சதவீதம் சம்பள மானியம் அரசால் அளிக்கப்படும்.

(16) கல்லூரி கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு மற்றும் சூரிய எரிசக்தி அமைப்புகள் ஆகியவை ஏற்படுத்தப்படவேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.
தலைவர் /செயலர், SRM Institute of Science and Technology கல்வி அறக்கட்டளை, எண்.3, வீராசாமி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–33.

<u>நகல்:</u>

மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர் கல்வித்துறை, சென்னை –9.
இ.கோ/ உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

26.5.18

PRINCIPAL
SRM TRICHY COLLEGE OF
ARTS AND SCIENCE
IRUNGALUR,TRICHY-621 105